ரவிக்குமார் ●



நிருபமா சாரதி

# தேவை - ஆக்கப்பூர்வ தகவல் மையம்!

குடும்பங்களில், பணிபுரியும் இடங்களில், ஊடகங்களில், விளம்பரங்களில்... என நீக்கமற நடந்து கொண்டிருக்கின்றன பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள். இந்தக் கொடுமைகளுக்கு எதிராக கடந்த 25 முதல் வரும் 10 முதல் சென்னையில் 16 நாட்கள் பிரசாரம் செய்துவருகின்றது சென்னையைச் சேர்ந்த பிரஜன்யா அறக்கட்டளை என்னும் தன்னார்வத் தொண்டு நிறுவனம். இந்த அமைப்பின் நிர்வாக அறங்காவலரான டாக்டர் சுவர்ணா ராஜகோபாலனிடமும், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரான நிருபமா சாரதியிடமும் பேசினோம்.

“நான் தில்லியிலுள்ள உள்ள ‘சென்டர் ஃபார் பாலிஸி ரிசர்ச்’சில் ‘செக்யூரிட்டி இன் இன்டர்நேஷனல் ரிலேசன்ஸ்’ என்னும் தலைப்பில் என்னுடைய முனைவர் பட்ட ஆய்வை முடித்தேன். இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் மிச்சிகன், ஏல், இலினாய்ஸ் போன்ற புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகப் பணியாற்றியிருக்கிறேன்.

இந்தியாவின் பல முன்னணி நிறுவனங்களில்

தொடர்ச்சி 23-ம் பக்கம்

7–ம் பக்கத் தொடர்ச்சி



பணியாற்றிய அனுபவமும், சமூகவியலில் எனக்கிருக்கும் நாட்டமும்தான் இந்த அறக் கட்டளையை நான் தொடங்குவதற்குக் காரணம். இந்த அறக்கட்டளையின் நோக்கம் வெறும் பிரசாரம் மட்டுமல்ல, அமைதி, நீதி, பாதுகாப்பை பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உறுதி செய்வதும்தான். இதற்கான போராட்டத்தில் பிரஜன்யா தன்னை வரும்காலத்தில் ஈடுபடுத்திக் கொள்ளும். இந்தப் போராட்டத்திற்கு பிரஜன்யா தயாராவதற்கான முதல் படிதான் 16 நாட்களுக்கு நாங்கள் நடத்தும் பெண்களுக்கு நடக்கும் வன்கொடுமைகளுக்கு எதிரான இந்தப் பிரசாரம்.

இந்தச் சமூகத்தில் பெண்களுக்கு நடக்கும் வன்கொடுமைகளுக்கு எதிராக பல தளங்களிலும் பிரசாரம் செய்ய வேண்டியிருக்கின்றது. இதன் அடிப்படையில் தினம் ஒரு துறை சார்ந்த தளத்தில் பிரசாரத்தை நடத்த இருக்கின்றோம். அறக்கட்டளையின் இன்னொரு முக்கியமான விஷயம், பெண்களுக்கான ஆக்கப்பூர்வ மையம். பெண்களின் முன்னேற்றங்கள், சாதனைகள், அவர்களுக்கு எதிரான சமூகக் குற்றங்கள்... என பெண்கள் தொடர்பான எல்லாச் செய்திகளையும் ஒரே இடத்தில் பார்ப்பதற்கான வசதி தற்போது தமிழ்நாடு முழுவதும் இல்லை. இது குறித்து ஆங்கில, தமிழ் அச்சு ஊடகங்களில் வெளிவந்த செய்திகளை இந்த மையத்தில் வைத்திருப்போம். 'இப்படிப்பட்ட ஆக்கப்பூர்வமான மையத்தை ஏன் தொடங்கினீர்கள்?' என்று சில பேர் என்னிடம் கேட்கிறார்கள். வேறு யாரும் தொடங்கவில்லை அதனால் நான் தொடங்கியிருக்கிறேன் என்று அவர்களுக்கு நான் பதில் சொல்கிறேன்.




பெண்களுக்கு எதிரான கொடுமைகள் குறித்து ஆய்வு நடத்துபவர்களுக்கு, அவர்களின் சட்டரீதியான பாதுகாப்புக்கு... என்று பல விஷயங்களில் இந்த ஆக்கப்பூர்வ மையம் பாதிக்கப்பட்டவர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும்" என்று அதன் அவசியத்தை விளக்கினார் சுவர்ணா.

"இந்த 16 நாள் பிரசாரத்தில் பெண்கள் சார்ந்திருக்கும் எல்லாத் துறைகளும் வருமாறு பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதில் நடைபாதைகளில் சிறிய பெட்டிக் கடைகள் வைத்து வியாபாரம் செய்யும் பெண்கள் முதல் மிகப் பெரிய தொழில் நிறுவனங்களில், தகவல் தொழில்நுட்பப் பணி மையங்களில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் வரை அனைவரின் பிரச்னைகளையும் விவாதிப்பதற்கான வழிகளை ஏற்படுத்தியிருக்கிறோம். பிரச்னைகளுக்கான தீர்வுகளையும், ஆலோசனைகளையும் தகுந்த துறை சார்ந்த நிபுணர்களைக் கொண்ட குழுவின் மூலம் பரிந்துரைக்கிறோம்.

பெண்களுக்கு நடக்கும் வன் கொடுமைகளுக்கு எதிரான ஊர்வலம், ஆவணப்படம் திரையிடல், கவிதை வாசிப்பு போன்ற நிகழ்ச்சிகள் நடக்க இருக்கின்றன. கருக்கலைப்பு தொடர்பாக இணையதளங்களின் வழியான நிகழ்ச்சி நடக்க இருக்கின்றது.

விளம்பரங்களிலும், மக்கள் தொடர்புச் சாதனங்களிலும், ஊடகங்களிலும் பெண்களை எப்படி சித்திரிக்கிறார்கள் என்பது தொடர்பான விவாத அரங்கும் நடக்க இருக்கின்றது. இதில் பெண்கள் பாதுகாப்பு அமைப்புகளில் இருக்கும் உறுப்பினர்களும், திரைப்படம் மற்றும் மீடியாவில் பணிபுரிபவர்களும் பங்கேற்கும் கலந்துரையாடலும் நடக்கவிருக்கின்றது. இறுதி நாளான இம்மாதம் 10 அன்று, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் தலைவரான (TIIC) ஷீலா ராணி சுங்கத் சிறப்புரையாற்றுகிறார்" என்றார் பிரஜன்யாவின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரான நிருபமா.

■